**தலைப்பு 159 – சுற்றுலாத்துறை அமைச்சு**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சுற்றுலாத்துறை அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றுலாத்துறை அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 20 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சுற்றுலாத்துறை அமைச்சின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 காசுப்பாய்ச்சல் கூற்று

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் வருமானமல்லாத பெறுவனவுகள் ரூபா 4,953,584 ஆக காணப்பட்டதுடன் இது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பரீட்சை மீதியின் பிரகாரம் ரூபா 4,170,478 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 783,106 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிப்பதன் நோக்கம் காசுப் பெவறுவனவுகள் மற்றும் காசு மூலமான உண்மையான கொடுப்பனவுகள் என்ன என்பதைக் கண்டறிவதாகும். அதற்கிணங்க காசுப் பெறுவனவுகள் மற்றும் காசுக் கொடுப்பனவுகளை அடிப்படையாகக் கொண்டு காசுப்பாய்ச்சல் கூற்றைத் தயாரிப்பது ஒரு பாரம்பரியமாகும். குறுக்கு பதிவுகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் காசுபபாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்படுவதில்லை. அதன் அடிப்படையில் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுகின்றது. குறுக்குப் பதிவுகள் பரீட்சை | 2020 ஆகஸ்ட் 28 இன் 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று மொத்த அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மீதியில் உள்ளடகக்கப்பட்டுள்ளன. | |
| (ஆ) | காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டுக் கொடுப்பனவுகள் ரூபா 134,554,175 ஆக காணப்பட்டதுடன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பரீட்சை மீதியின் பிரகாரம் இது ரூபா 165,428,144 ஆக காணப்பட்டது. ஆகையால் ரூபா 30,873,969 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது தேறிய காசுப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் கருத்தில் கொள்ளப்படுகின்றன. அதற்கிணங்க ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டுக் கொடுப்பனவுகள் தொடர்பான குறுக்கு பதிவுகள் நீக்கப்பட்ட பின்னர் பெறப்பட்ட மிகுதி பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும் பரீட்சை மீதியில் குறுக்குப் பதிவுகளுடன் இப் பெறுமதி கொடுக்கப்பட்டுள்ளதால் இம் மீதி அவதானிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் ஏனைய தலைப்புக்கள் மீதான செலவினம் தொடர்பாக ஏற்பட்ட செலவினங்கள் ரூபா 29,530,599 ஆக காணப்பட்ட போதிலும் பரீட்சை மீதியின் பிரகாரம் இது ரூபா 30,390,753 ஆக காணப்பட்டதனால் ரூபா 860,154 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 2020 ஆம் ஆண்டின் முதல் சில மாதங்களுக்காக சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் மற்றும் அவரது பதவியணியினர் தொடர்பான செலவினங்களை இந்த அமைச்சின் மூலம் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. ஆகையால் இராஜாங்க அமைச்சு பின்னர் தனித்தனியாக ஸ்தாபிக்கப்பட்டது, அந்த ஆண்டின் போது ஏற்பட்ட செலவினங்களை இராஜாங்க அமைச்சின் தலைப்பு - 437 இற்கு வரவு வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் ஆண்டின் போது பட்டதாரி பயிலுநர் சம்பளம் மற்றும் SAIL செயற்திட்டம் என்பன தொடர்பாக வர்த்தக அமைச்சிடம் இருந்து பெறப்பட்ட ஒதுக்கீடுகளை செலவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இது ரூபா 29,530,599 கூட்டுத்தொகையானதுடன் பரீட்சைமீதியில் காட்டப்பட்டுள்ள பெறுமதியை ஒத்திருந்தது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் நிர்மாணம் அல்லது பௌதீக சொத்துக்களின் கொள்வனவிற்கான செலவினம் ரூபா 35,494,618 ஆக காணப்பட்ட போதிலும் ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் இது ரூபா 8,305,632 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 27,188,986 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக தேசிய பாதீட்டிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட நிர்மாண செலவினம் அல்லது பௌதீகச் சொத்துக்களின் கொள்வனவு தொடர்பாக செலவிடப்பட்ட உண்மையான பணம் ரூபா 35,494,618 காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (உ) | காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 2,644,002 ஆக காணப்பட்ட போதிலும் ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் இது ரூபா 5,570,977 ஆக காணப்பட்டதனால் ரூபா 2,926,975 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | காசுப்பாய்ச்சல் கூற்று உண்மையான காசுப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றதுடன் அனைத்து குறுக்கு பதிவுகளும் பரீட்சைமீதி தயாரிக்கும் போது கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன. ரூபா 2,644,002 தொகையான உள்ளபடியான கடன் மாத்திரம் 2020 ஆம் ஆண்டின் போது அரசாங்க ஊழியர்களின் முற்பண பீ கணக்கின் கீழ் செலவிடப்பட்டுள்ளது. பரீட்சைமீதியில் காட்டப்பட்ட ரூபா 5,570,977 தொகையில், ரூபா 2,926,975 தொகை ஏனைய அமைச்சுக்களிற்கு இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் தீர்ப்பனவு தொடர்பானவையாகும். அவை குறுக்கு பதிவுகள் ஊடாக கணக்குப் பொழிப்பு மூலம் மேற்கொள்ளப்படுவதால் அது பரீட்சைமீதியில் காட்டப்படுகின்றதுடன் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்படுவதில்லை. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் முற்பணங்களிலிருந்தான அறவீடுகள் ரூபா 5,794,774 ஆக காணப்பட்ட போதிலும் இது காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கு தொடர்பாக இந்த அமைச்சின் உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்ட கடன் தவணைகள் மற்றும் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் என்பன பெறுவனவுகளாக கருதப்படுகின்றன. இப் பெறுவனவுகள் அனைத்தும் காசல்லாத குறுக்கு பதிவுகள் மூலம் பெறப்படுகின்றதால் அவை காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் எந்த வகையிலும் மேற்கொள்ளப்பட்ட பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் பரீட்சைமீதியில் உள்ளடக்கப்படுகின்றன. | -மேற்படி- |
| (எ) | காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் வைப்புக் கொடுப்பனவுகள் ரூபா 2,219,779 ஆக காணப்பட்ட போதிலும் ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் இது ரூபா 2,258,732 ஆக காணப்பட்டதனால் ரூபா 38,953 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | காசுப்பாய்ச்சல் கூற்று உண்மையான காசுப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றது. இதனால், வைப்பு கணக்கு தொடர்பான தேறிய கொடுப்பனவுகள் மாத்திரமே காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன. | -மேற்படி- |
| (ஏ) | ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் வைப்பு பெறுவனவுகள் ரூபா 2,247,297 ஆக காணப்பட்ட போதிலும் இது காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | காசுப்பாய்ச்சல் கூற்று உண்மையான காசுப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றது. இதனால், வைப்பு கணக்கு தொடர்பான தேறிய கொடுப்பனவுகள் மாத்திரமே காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன. | -மேற்படி- |

**1.6.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் சான்றுபடுத்தல்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்ய வேண்டிய போதிலும், அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதாக கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி. 135 - 138 இன் பிரகாரம் அமைச்சு உள்ளக கட்டுப்பாட்டுடன் கூடிய அதிகாரத்தை வழங்கியுள்ளதுடன் பிரதம உள்ளகக் கணக்காய்வாளருடன் உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. | அத்தகைய முறைமைகளை ஆக்கபூர்வமாக செயற்படுத்துவதற்குத் தேவையான மாற்றங்களை அமுல்ப்படுத்திய பின்னர் எழுத்துமூலமான பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| அவதானிப்பு<br>சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | அவதானிப்பு<br>இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | (அ) | 2020 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டத்தில் நாளதுவரையாக்கப்பட்ட அமைப்பு வரைபடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் | 2020 ஆம் ஆண்டிற்கான கணக்கு தொடர்பாக வாக்குப்பணம் மூலம் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த தால் ஒவ்வொரு | சுற்றறிக்கையுடன் இணங்குதல் வேண்டியதுடன் செயல்நடவடிக்கை திட்டம் நாளதுவரையாக் |

| | | | |
|---|---|---|---|
| | தற்போதைய ஆளணி விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலப்பகுதிக்கும் அமைப்பு வரைபடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி விபரங்களை நாளதுவரையாக்கி செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்படுகின்றது. | கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் இது தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கை தற்போது திட்டமிடல் பிரிவால் தயாரிக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையுடன் இணங்குதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக அமைச்சால் திட்டமிடப்பட்ட மொத்த கட்டுநிதி ரூபா 370,648,500 ஆக காணப்பட்ட போதிலும் பெறப்பட்ட கட்டுநிதி ரூபா 200,037,000 ஆக காணப்பட்டது. ஆகையால் திட்டமிடப்பட்ட தொகையில் 54 சதவீதம் மாத்திரமே பெறப்பட்டிருந்தது. | ஆண்டின் ஆரம்பத்தில் பாதீட்டு ஒதுக்கீட்டின் அடிப்படையில் கட்டுநிதி திட்டம் தயாரிக்கப்பட்டு, அதில் மாதாந்த கட்டுநிதித் தேவைப்பாடுகள் மேற்கொள்ளப்படும். எனினும், ஒரு மாதத்தில் கோரப்பட்ட கட்டுநிதி தொகை அந்த குறிப்பிட்ட மாதத்தில் முழுமையாகப் பெறப்படாவிட்டால், அத்தகைய பெறப்படாத தொகை தொடர்ந்துவரும் மாதங்களில் கோரப்படும். இதன் காரணமாக, கோரப்பட்ட கட்டுநிதி தொகை உயர் பெறுமதி ஒன்றாகக் காட்டப்படுகின்றது. திறைசேரி செயற்பாடுகள் | மதிப்பீடுகள் சரியாக செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | திணைக்களத்திற்கு கட்டுநிதித் தேவைப்பாடுகள் குறித்து தெரிவித்த பினனர் பெறப்படும் கட்டுநிதித் தொகை அமைச்சால் முகாமை செய்யப்படும். | |

## 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 05 மூலதன செலவின விடயங்களிற்காக முறையே ரூபா 1,561,600 மற்றும் ரூபா 5,313,850 தொகைகளாக ரூபா 6,875,450 கூட்டுமொத்த தொகையான மேலதிக ஒதுக்கீடுகள் வீரமன் நடைமுறையின் கீழ் மாற்றப்பட்டிருந்தன. ஆகையால் ஆரம்ப மதிப்பிடப்பட்ட தொகையுடன் ஒப்பிடும் போது மாற்றப்பட்ட ஒதுக்கீடுகளின் சதவீதம் 3 சதவீதத்திற்கும் 5387 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. நிதிப்பிரமாண இல. 50 இன் பிரகாரம் மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டிடப் பராமரிப்பு செலவின விடயத்திற்காக ஒதுக்கீடுகள் முக்கியமாக வீரமன் நடைமுறையின் கீழ் மாற்றப்பட்டு அமைச்சு இன்னொரு இடத்திற்கு மாற்றப்பட்டதே இதற்கான காரணமாக உள்ளது. அறைகளை பாகப்பிரிவினை செய்வதற்கும், முன்னைய கட்டிடத்தின் பொருத்துக்களை அகற்றுவதற்கும் செலவினங்களைத் தீர்ப்பனவு செய்வதற்காக ஒதுக்கீடுகள் இவ்வாறு மாற்றப்பட்டிருந்தன.<br><br>இங்கு தொற்றுநோய் காரணமாக பல செலவினங்கள் குறைவடைந்து காணப்பட்டதுடன் அமைச்சு தனியான இடமொன்றில் நிறுவப்பட்டதால் சில செலவின விடயங்களில் அதிகரிப்பொன்று எதிர்பார்க்கப்பட்டது. அதன் பிரகாரம் ஒதுக்கீடுகள் சேமிப்புக்கள் காணப்பட்ட செலவின விடயங்களிலிருந்து ஒதுக்கீடுகள் போதுமானதாக இல்லாத செலவின விடயங்களிற்கு மாற்றப்பட்டன.<br><br>மேலும், சீருடை படிகளுக்கு உரித்துடைய கௌரவ அமைச்சரின் பதவியணி உத்தியோகத்தர்கள் எவரும் காணப்படாததால் பாதீட்டிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 3000 தொகையான உத்தியோகத்தர் சீருடைகள் தொடர்பாக பாதீட்டில் 100% குறைப்பு காட்டப்பட்டதால் ஏனைய செலவின விடயங்களிற்கு முழுமையாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.3 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை ஏற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் ஆண்டின் இறுதியில் மதிப்பிடப்பட்ட தொகையில் சேமிப்புக்கள் காணப்பட்டால் மாத்திரமே கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை ஏற்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சு ரூபா 8,584,685 கூட்டுத்தொகையான 15 செலவின விடயங்களில் சேமிப்புக்களை மிகைத்து பொறுப்புக்களை ஏற்படுத்தியிருந்தது. | இப் பொறுப்புக்கள் அத்தியாவசிய நடவடிக்கைகளுக்காக ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் ஒரு நிகழ்வு தவிர ஏனைய அனைத்தும் மீண்டெழும் செலவினங்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் இவ்வாறான சந்தர்ப்பங்களைத் தவிர்க்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளை ஏற்படுத்துதல் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 06 ஆம் வழிகாட்டலின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பு இலக்கம் iii இன் கீழான பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்று ஒவ்வொரு செலவின தலைப்புக்களிற்காகவும் திறைசேரியால் வழங்கப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்றுடன் (எஸ்ஏ 92) இணக்கம் செய்யப்பட வேண்டும். எனினும் குறிப்பு இலக்கம் iii இன் கீழான பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் அக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. திறைசேரியின் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் பதிவுசெய்யப்படாத பொறுப்புக்கள் மற்றும் | ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி 28 இற்கு முன்னர் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். அமைச்சின் பல்வேறு பிரிவுகள் இக் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளை ஏற்படுத்துகின்றதுடன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய கடைசித் திகதியளவில் கணக்குப் பிரிவுக்கு அறிக்கையிடப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மாத்திரமே நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படும். ஆகையால் நி.பி. 115 இன் பிரகாரம் மார்ச் 31 வரை அங்கீகாரமின்றி செலுத்துவதற்கு முன்னைய ஆண்டு கொடுப்பனவுகள் சமர்ப்பிக்கப்பட்டதால் இந் நிலைமை ஏற்பட்டுள்ளது. | அமைச்சின் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் திறைசேரிக் கூற்றுடன் இணக்கம் செய்யப்பட வேண்டியதுடன் திறைசேரி கூற்றில் அறிக்கையிடப்படாத பொறுப்பொன்று அல்லது கடப்பாடொன்று முன்னைய ஆண்டு செலவினங்களாக கருத்தில் கொண்டு தீர்ப்பனவு செய்யப்படக்கூடாது. |

கடப்பாடுகள் முன்னைய ஆண்டின் செலவினங்களாக கருத்தில் கொள்ளப்பட்டு தீர்ப்பனவு செய்யப்படக்கூடாத போதிலும் மீளாய்வாண்டின் போது பதிவுசெய்யப்படாத ரூபா 15,237,602 தொகையான பொறுப்புக்கள் 2021 ஆம் ஆண்டில் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 அரசாங்க உத்தியோகத்தர்களால் பிணை வைக்கப்படுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பிணைவைத்தல் கட்டளைச் சட்டத்தின் 612 ஆம் ஏற்பாட்டிற்கிணங்கவும் நிதிப்பிரமாணம் 880 இன் ஏற்பாடுகளின் பிரகாரமும் அரசாங்க பணம், வருமானம், முத்திரைகள் மற்றும் களஞ்சியப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் அல்லது அரசாங்க பணம், முத்திரைகள் மற்றும் களஞ்சியப் பொருட்களை வழங்குவதற்கு நிர்வாக ரீதியாகப் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் அரசாங்க கணக்கு தொடர்பாக உறுதிச்சீட்டுக்களை சான்றுறுதிப்படுத்தி காசோலைகளில் கையெழுத்திடும் உத்தியோகத்தர்கள் பிணை வைக்க வேண்டிய போதிலும் அமைச்சின் 20 உத்தியோகத்தர்களால் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 880 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |